# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
# UNIT – V – CURRENT AFFAIRS
## தமிழ்நாடு அரசு நலத்திட்டங்கள்

**இல்லம் தேடி கல்வி:**

- ✓ விழுப்புரம் மாவட்டம் முதலியார் குப்பத்தில் 27-10-2021 அன்று துவங்கப்பட்டது.
- ✓ வாரத்தில் ஆறுநாள் ஆறமணி நேரத்திற்கு கற்றல்சார் செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது.
- ✓ இத்திட்டத்திற்கான சிறப்பு மென்பொருள் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ இதற்காக பள்ளி மேம்பாட்டுக் குழுவின் மூலம் தன்னார்வலர்கள் பயிற்றுநர்களாகத் தேர்வு செய்யப்படுவர்.

1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி, கற்றல் இழப்புகளை ஈடுசெய்வது மற்றும் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பது என்ற உயரிய நோக்கங்களுடன். 8 இலட்சம் தன்னார்வலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை சீரிய முறையில் வழிநடத்துவதற்காக மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி ஆகிய மூன்று அடுக்கு நிலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தன்னார்வலர்களுக்கு தோழமையுடன் சமூகக் கடமையாற்றும் வாய்ப்பு அளிக்கக் கூடிய இடமாகத் திகழ்கின்றன.

**ஜவுளித்துறை:**

- ✓ தமிழ்நாடு கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் ஜவுளிகளுக்கான துறையிலிருந்து தனியாகப் பிரித்து ஜவுளித்துறை உருவாக்கப்பட்டது.
- ✓ கள்ளக்குறிச்சி, அடும்பாவூர் மரச்சிற்பம் கருப்பர் நலம்காரி ஓவியங்கள் தஞ்சாவூர்நெட்டி ஆகியவற்றுக்கான புவிசார் குறியீட்டை வழங்கியுள்ளன.
- ✓ புவிசார் குறியீடு ஒரு குறிப்பீட்ட பொருளின் தரம், பாரம்பரியம், கலாசாரம் மற்றும் பழைமையை பாதுகாக்க உதவுகிறது.
- ✓ தீபாவளிப் பண்டிகைக்காக தமிழ்த்தறி என்று பெயரிடப்பட்ட ஜவுளி வகைகளை முதல்வர் அறிமுகம் செய்தார்.
- ✓ கற்பகம் பணைவெல்லம், பனைவிவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கற்பகம் என்ற பெயரில் நியாய விலைக் கடைகளிலும், கரும்பனை என்ற பெயரில் பல்பொருள் அங்காடிகளிலும் பனைவெல்ல விற்பனை செய்வதைத் துவக்கி வைத்தார்.
- ✓ தமிழ்நாட்டின் காதி நிறுவனத் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக "tnkhadi" என்ற ஆண்ட்ராய்டு செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**200 முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள்:**

- ✓ தமிழ்நாடு முதலமைச்சர் 22-10-2021 அன்று தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பில் இ-முன்னேற்றம், மற்றும் இ-தகவல் தொழில்நுட்ப நண்பன் ஆகிய இரு வலை தளங்களை துவங்கி வைத்தார்.
- ✓ இத்திட்டங்களின் வளர்ச்சி மீளாய்வை கண்காணிக்க இ-முன்னேற்றம் இணையதளத்தை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கியுள்ளது.
- ✓ தமிழ்நாடு மின் முகமை ஆளுமையால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நண்பன் தகவல் தொழில்நுட்ப தொழில்கள் குறித்த கருத்துக் கேட்புத் தளமாக விளங்குவதுடன் இதில் இணைந்து கொள்கைகள் உருவாக்குவதில் அவர்களின் பங்களிப்யை அளிக்க உதவும்.

- ✓ மேலும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட கீழடி விசைப்பலகை, மற்றும் தமிழி- இணைய ஒழுங்குறிமாற்றியையும் வெளியிட்டார்.

**தமிழ்நாட்டின் முதல் பல்முனை சரக்குப் போக்குவரத்து பூங்கா:**

- ✓ இது திருவள்ளூரில் 1200 கோடி செலவில் 158 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது.
- ✓ திருபெரும்புதூர், ஒரகடம் மற்றும் பிள்ளைப்பாக்கம் ஆகிய முக்கிய தொழிலகப் பகுதி அருகே அமையவுள்ளது.
- ✓ இப்பூங்கா சரக்குப் போக்குவரத்திற்கான செலவை கணிசமான அளவில் குறைக்க உதவும்.
- ✓ தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்து திட்டம் ஒன்றை மாநிலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கவுள்ளது.
- ✓ இத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளது.
- ✓ தற்போது அமையவிருக்கும் சரக்குப் போக்குவரத்து பூங்காவை கட்டமைப்பதில் மத்திய அரசுடன் இணைந்து சென்னைத் துறைமுகக் கழகம் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆகியவை இணைந்து பணியாற்ற உள்ளன.
- ✓ இதே போன்ற பூங்காக்களை கோவை மற்றும் தூத்துக்குடியில் அமைக்கும்படி தமிழக அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

**மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையம் 2.0:**

- ✓ முதலீட்டாளர்களின் திட்டங்களுக்கு விரைவில் அனுமதி வழங்கவும், எளிதாகவும் துரிதமாகவும் செயல்படுத்தவும் உதவும் வகையில் ஒற்றைச் சாளர வசதியின் மேம்பட்ட முகப்பை வெளியிட்டார்.
- ✓ இது ஒரு திறன்வாய்ந்த உலகளவில் பெரியளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்காக உலகளாவிய திறன்கொண்ட உள்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு ஏற்படுத்தியுள்ளது.
- ✓ மேலும் தெற்காசியாவிலேயே தொழில் துவங்குவதற்கான சிறந்த இடமாக தமிழ்நாட்டை மாற்றுவதே எனது நோக்கம் என முதல்வர் கூறியுள்ளார்.

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் சங்கம் மறுசீரமைப்பு செய்யப்படுதல்:**

- ✓ தமிழ்நாடு பணியாளர்களின் நலனை காப்பதில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்குகிறது.
- ✓ கைத்தொழிலாளர் (வேலை வாய்ப்பு மற்றும் பணியிட நிலையை முறைப்படுத்துதல்) சட்டம் 1982 ம் ஆண்டு அமைப்பு சாரா பணியாளர்களின், சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கொண்டுவரப்பட்டது.
- ✓ கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் 1994 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- ✓ இந்த நலவாரியத்தில் பதிவு செய்வதற்கான பதிவுத் தொகை 01.09.2006 அன்று கருணாநிதி அவர்களால் நீக்கப்பட்டது.
- ✓ 01.11.2008 அன்று அமைப்பு சாரா தொழிலாளர்கள் இத்திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கு ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் சமூகம் பாதுகாப்புத் திட்டங்களுக்கான துணை ஆணையர் அலுவலகம் உருவாக்கப்பட்டது.
- ✓ கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் தற்போதைய தலைவர் திரு பொன்குமார்.
- ✓ இவ்வாரியம் தமிழ்நட்டில் 13,41,494 பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**கல்வி தொலைக்காட்சி:**

- ✓ கொரோனா காலத்தில் பள்ளி வந்து கற்க இயலாத 1 முதல் 12ம் வகுப்பு மாணவர்கள் வீட்டிலிருந்தபடியே பாடம் கற்க ஏதுவாக 292 கோடி ரூபாய் செலவில் 19.06.2021 முதல் முதலமைச்சரால் கல்வி தொலைக்காட்சி துவங்கப்பட்டது.
- ✓ இத்திட்டம் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 69 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.
- ✓ பெருந்தொற்றினால் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டிருந்த நிலையில் பள்ளிகளின் பணியை கல்வித்தொலைக்காட்சி தனது ஒளிபரப்பு மூலம் மேற்கொண்டது. பாடவாரியாக வகுப்புவாரியாக ஒளிபரப்பப்படும் காணொலிகள் அரசு கேபிள் தொலைக்காட்சி வாயிலாகவும் தனியார் தொலைக்காட்சிச் சேனல்கள் வாயிலாகவும் நேரடி வீட்டு இணைப்புகள் DTH வாயிலாகவும் பல்வேறு கேபிள் சேவை இணைப்பாளர்கள் வாயிலாகவும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.